**செ.வெ.எண்:14** **நாள்-07.09.2019**

# பத்திரிக்கைச் செய்தி

ஒவ்வொரு ஆண்டும் முன்னாள் காலஞ்சென்ற தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு அதனை சிறப்பிக்கும் வகையில் அண்ணா சைக்கிள் போட்டி நடத்தப்படுகிறது. 2019-2020ஆம் ஆண்டிற்கு அண்ணா மிதி வண்டிப்போட்டிகள் அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் **15.09.2019** அன்று 07.00 மணி அளவில் நடைபெறவுள்ளது.

போட்டியில் கலந்துகொள்ளும் மாணவ, மாணவியர்கள் தங்கள் சொந்த செலவில் சைக்கிள் கொண்டு வருதல் வேண்டும், சாதாரண மிதிவண்டியாக இருத்தல் வேண்டும், அகலமான கிராங்க் பொருத்தப்பட்ட மிதிவண்டிகளை பயன்படுத்துதல் கூடாது, மாணவ, மாணவியர்கள் போட்டி துவங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னரே போட்டி நடத்தப்படும் இடத்திற்கு வயது சான்றிதழ்களுடன் வந்தடைதல் வேண்டும். சாதாரண கைப்பிடி கொண்ட மிதிவண்டியாக இருத்தல் வேண்டும். மிதிவண்டிப்போட்டிகளில் நேரும் எதிர்பாராத விபத்துகளுக்கோ தனிப்பட்ட பொது இழப்புகளுக்கோ பங்குபெறும் மாணவ, மாணவிகளே பொறுப்பு ஏற்கவேண்டும் என்று ஒப்புதல் அளிக்க வேண்டும். சைக்கிள் போட்டியின் தொலைவு விவரங்கள் சைக்கிள் போட்டிகள் நடைபெற இருக்கும் தடங்கள் 15.09.2019 அன்று போட்டிகள் நடைபெறும் முன்பு தெரிவிக்கப்படும்.

போட்டிகள், 13-வயதிற்குள் எட்டாம் வகுப்பு வரை பயிலும் **மாணவர்களுக்கு 15 கி.மீட்டர் வரையிலும், மாணவிகளுக்கு 10 கி.மீட்டர் வரையிலும்,** 15-வயதிற்குள் 9,10ஆம் வகுப்பு வரை பயிலும் **மாணவர்களுக்கு 20 கி.மீட்டர் வரையிலும், மாணவிகளுக்கு 15 கி.மீட்டர் வரையிலும்,** 17-வயதிற்குள் 11,12ஆம் வகுப்பு வரை பயிலும் **மாணவர்களுக்கு 20 கி.மீட்டர் வரையிலும், மாணவிகளுக்கு 15 கீ.மீட்டர் வரையிலும்** நடைபறெும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் வீரர், வீராங்கனைகளுக்கு பரிசுகளும், முதல் பத்து இடங்களைப் பெறும் வீரர், வீராங்கனைகளுக்கு தரவரிசை சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஆதலால், பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்கள் தங்களின் வயது சான்றிதழ்களுடன் வருகை தந்து போட்டிகளில் கலந்துகொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**